# IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.

## O.S.No. 154 Of 2019

| | | |
|---|---|---|
| **Witness Rank** | **:** | PW1 |
| **Name of the Witness** | **:** | ஜெயந்தி |
| **Father's Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Occupation** | **:** | |
| **Address** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 2nd day of March, 2026.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி** :-

எனக்கு ஒரே மகன். எனது மகன் ஒராண்டு Switzerland லும் பிறகு திருவனந்தபுரத்திலும் மேற்படிப்பு படித்தார். எந்த ஆண்டு Switzerland சென்றார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அவரது மேற்படிப்பிற்காக ரூ.13 லட்சம் செலவானது. 2009-ல் ஓய்வு பெற்ற பிறகு எனது கணவருக்கு கிடைத்த ஓய்வூதியத் தொகையை வங்கி கணக்கில் தான் வைத்து செலவு செய்தார். 2016 ல் நான் பிரதிவாதிக்கு கடன் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு கடன் கொடுத்து இருந்தால் நானும் என் கணவரும் வங்கி ஊழியர்களாக உள்ள காரணத்தினால் எங்களது வங்கி கணக்கை தாக்கல் செய்து இருப்போம் என்றாலும் வங்கி கணக்கை என்னால் தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால் அவசியம் இல்லை ஏனெனில் நான் ரொக்கமாகத் தான் அந்த பணத்தை வைத்து இருந்தேன். RBS Financial

Corporation என்ற கூட்டு நிறுவனம் வாதியின் கணவர் பிரதிவாதி மற்றும் ராஜன் எட்வர்டு என்பவர் 2019 ஆம் ஆண்டு நஷ்டத்தில் இயங்குவதால் கலைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நாளிடப்பட்ட காசோலை 3 மாத காலத்திற்குள் வங்கியில் செலுத்த வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். RBS நிதி நிறுவனம் நடத்திய சமயத்தில் பிரதிவாதி கையொப்பமிட்ட ஒரு வெற்று காசோலையை விட்டு விட்டு சென்று விட்டார் என்றாலும் அதை பயன்படுத்தி தற்போது ஒரு பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் எந்த காசோலையையும் கொடுக்கவில்லை என்றாலும் முறையற்ற வகையில் கையொப்பமிட்ட அந்த வெற்று காசோலையை பயன்படுத்தி பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ரூ.14 லட்சம் கடன் கொடுக்க எனக்கு எந்த வசதியும் இல்லை என்றாலும் நான் நகைகளை அடகு வைத்து பணம் புரட்டியதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் உண்மையிலேயே அவ்வாறு கடன் கொடுக்க எனக்கு வசதியிருந்து இருந்தால் அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

பிரதிவாதியின் தனிப்பட்ட தொழிலுக்காக பணம் கேட்டு அதற்காகத் தான்

ரூ.14 லட்சம் கைக் கடனகாக ஆவணம் எதுவும் பெற்றுக்கொள்ளாமல் நான் கடன் கொடுத்தேன். எனது கணவர் சொன்னதன் பேரில் கடன் கொடுத்தேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

எனது முதல்விசாரணையில் இந்த விவரத்தை சொல்லாமல் தற்போது பொய்யாக நான் குறுக்குவிசாரணையில் சொன்ன பதிலுக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*